பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 04 2025 **FRIDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, **Dawoodi Bohra** அமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்து வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

2. நக்சல் பிரச்சினையை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவர மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு இந்திய விண்வெளி வீரர் அடுத்த மாதம் பயணம் மேற்கொள்ள இருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. சுரங்கத் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் தகுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் **Anahat Singh, Akanksha Salunkhe, Veer Chotrani** ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, **Dawoodi Bohra** அமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள் இன்று சந்தித்தனர்.

வக்ஃப் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடியை இந்த குழுவினர் அண்மையில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் மாளிகையில் இக்குழுவினர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து, இஸ்லாமியர்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதற்கு தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

நக்சல் பிரச்சினையை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்

சத்தீஸ்கர் மாநிலத்தின் சுக்மா மாவட்டத்தில் **Badesetti** பஞ்சாயத்தில் 11 நக்சலைட்டுகள் உட்பட 22 பேர் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்திருப்பதற்கு அம்மாநில காவல்துறையினரை பாராட்டி, சமூக வலைதளத்தில் திரு அமித் ஷா பதிவிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் சரணடையும் கொள்கையை பின்பற்றி நக்சலைட்டுகள் விரைவில் ஆயுதங்களை கைவிட முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது, **Badesetti** பஞ்சாயத்து நக்சலைட் இல்லாத கிராமமாக அறிவிக்கப்பட்டிருப்பதையும் திரு அமித் ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக, சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்ட காவல்துறையினர் முன்னிலையில், 22 நக்சலைட்டுகள் சரணடைந்தனர். இதில் ஒன்பது பேர் பெண்கள் ஆவர்.

இவர்களை பிடிப்பதற்காக தலா 40 முதல் 50 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்த நக்சலைட்டுகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் மறுவாழ்விற்கான உதவிகள் வழங்கப்படும் என்றும் சத்தீஸ்கர் அரசு அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>>

சர்வதேச விண்வெளித் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்திய விண்வெளி வீரர் ஒருவர் அடுத்த மாதம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் மேற்கொள்ள இருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் முக்கியமான எதிர்கால திட்டங்கள் குறித்து புதுதில்லியில் இன்று உயர்நிலைக்குழு கூட்டத்தில் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜிதேந்திர சிங், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு இந்திய விமானப்படையின் கேப்டன் சுபான்ஷு சுக்லா-வை அனுப்பி வைப்பதன்மூலம், விண்வெளிப் பயணத்தில் இந்தியா மீண்டும் வரலாறு படைக்க இருப்பதாக தெரிவித்தார்.

**‘Ax-4’**விண்வெளித் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தியர் ஒருவர் விண்வெளிப் பயணத்தில் இணைய இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ககன்யான் போன்ற இத்தகைய திட்டங்களால் உலக அளவில் விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னிலை வகிக்கும் என்றும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

தமிழகம் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் அமையவிருக்கும் பிரத்யேக பாதுகாப்பு வழித்தடத்தில் இங்கிலாந்து நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வரவேண்டும் என பாதுகாப்புத்துறை செயலாளர் திரு ராஜேஷ் குமார் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில், உயர்நிலைக்குழுவினருடன் இரண்டு நாள் பயணமாக லண்டன் சென்றிருந்த அவர், இங்கிலாந்து உடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தினார்.

இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகத்துடன் இந்தியா நெருக்கமான நல்லுறவை கொண்டிருப்பதாகவும், பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில், தமது பேச்சுக்கள் அமைந்ததாகவும் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

தமது இந்த பயணத்தின்போது, இங்கிலாந்து உடன் பாதுகாப்பு ஒத்துழைப்பில் மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தப்பட்டதாகவும் திரு ராஜேஷ் குமார் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளராக திரு தேஜஸ்வி யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள மாநிலங்களவை உறுப்பினர் திரு மனோஜ் ஜா, பாட்னாவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்தார்.

முன்னதாக, பாட்னாவில் ஆர்ஜேடி, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சி பிரதிநிதிகளின் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

<<<<<>>>>>>>

சுரங்கத் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜார்கண்ட் மாநிலம் தன்பாத்தில் உள்ள சுரங்க பாதுகாப்பு தலைமை இயக்குனரக அலுவலகத்தின் செயல்பாடுகளை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று ஆய்வு செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுரங்கத்துறையில் பாதுகாப்பு நடைமுறைகளை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

நாட்டின் சுரங்க பாதுகாப்பு கட்டமைப்பை மதிப்பீடு செய்து, அதன் அடிப்படையில் சுரங்கப்பணிகளை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு கடந்த 11-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், சுமார் ஒரு லட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளது.

ரிசர்வ் வங்கி வெளியிட்ட வாராந்திர அறிக்கையில், வெளிநாட்டு கரன்சி மூலமான சொத்துக்கள் அதிகரிப்பதால் இந்த உயர்வு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கம் கையிருப்பை பொறுத்தவரை இதே காலக்கட்டத்தில் சுமார் 54 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை சீர்குலைக்க ஆளும் ஆம் ஆத்மி அரசும், காங்கிரஸ் கட்சியும் முயற்சி மேற்கொண்டிருப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

சண்டிகரில் பிஜேபி தேசிய பொதுச்செயலாளர் திரு தருண் சுக் வெளியிட்டுள்ள அறிக்கையில், காங்கிரஸ் உடன் கைகோர்த்து பஞ்சாப் மாநிலத்தை முந்தைய இருண்ட காலத்திற்கு அழைத்துச்செல்ல ஆம் ஆத்மி அரசு திட்டமிடுவதாக குறை கூறியுள்ளார்.

பஞ்சாப் மக்களின் நலன்களை பாதுகாக்க முதலமைச்சர் திரு பகவந்த் மான் தலைமையிலான அரசு தவறிவிட்டதாகவும் திரு தருண் சுக் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

ஜே இ இ பிரதான நுழைவுத் தேர்வு முடிவுகள் நாளை வெளியிடப்பட உள்ளன.

இதையொட்டி, இந்த தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளின் இறுதி விடைகள் ஜே இ இ இணையதளத்தில் வெளியிடப்பட்டிருப்பதாக தேசிய தேர்வுகள் முகமை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் செயற்கைக்கோள் அடிப்படையில் கட்டணங்களை வசூல் செய்யும் முறை அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் அறிமுகப்படுத்துவது தொடர்பாக எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, ஊடகங்களில் வெளியான செய்திகளையடுத்து மத்திய அரசு இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில சுங்கச்சாவடிகளில் மட்டும் தானியங்கி முறையில் வாகன பதிவெண்ணை அறிந்துகொள்ளும் கருவிகள் பொருத்தப்பட உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், சுங்கச்சாவடிகளில் நெரிசலை குறைக்க இயலும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

குஜராத், டாமன் டையூ, தத்ரா – நகர் ஹவேலி ஆகிய இடங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு வெப்பம் அதிகரிப்பதுடன், புழுதிக் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜ்கோட் மற்றும் கட்ச் பகுதிகளில் அனல் காற்று வீசக்கூடும் என்றும், சௌராஷ்ட்ரா மற்றும் வடக்கு குஜராத்தின் பல்வேறு இடங்களில் நாளை புழுதிக்காற்று வீச வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மணிக்கு 20 முதல் 30 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அடுத்த ஒரு வாரத்திற்கு குஜராத் மாநிலத்தில் வறண்ட வானிலையே நிலவும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

ஜாம்பியா நாட்டில் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 49-ஆக அதிகரித்துள்ளது.

**Muchinga** மாகாணம், **Mpika** மாவட்டத்தில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட 10 வயது குழந்தை நேற்று உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் **'Elijah Muchima** தெரிவித்தார்.

குரங்கு அம்மை நோய்க்கு ஏற்பட்டுள்ள முதல் உயிரிழப்பு இதுவாகும்.

கடந்த 15 நாட்களில் புதிதாக 13 பேருக்கு இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், 32 பேர் சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பிய நிலையில், 15 பேர் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கிடையே, காலரா நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 490-ஆக அதிகரித்துள்ளதாக **Elijah Muchima** தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஸ்குவாஷ் தகுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் **Anahat Singh', Akanksha Salunkhe'** மற்றும் **Veer Chotrani** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Anahat Singh** 11-1, 11-7, 11-5 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Akari Midorikawa**-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில், **Akanksha Salunkhe** 11-0, 11-3, 11-3 என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Au Yeong Wai Yhann** -ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், **Veer Chotrani, 9-11, 11-6, 11-6, 11-7** என்ற செட் கணக்கில் **Mohammad Syafiq** –ஐ வென்றார்.

------------------

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nishchay** வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

சவுதி அரேபியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான குண்டு எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் வட்டு எறிதலில் **Lakshita Mahlawat** வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<>>>>>>